**மகாணக்கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**Provincial Department Of Education, Northern Province**

**மாதாந்த பயிற்சி வினாத்தாள் - யூலை - 2022**

| தரம் - 12 (2023) | இந்து நாகரிகம் | இரண்டு மணித்தியாலம் |
|---|---|---|

**பகுதி ~ I**

❖ **சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. சிந்து நதி பாயும் பகுதி புதைபொருள் ஆய்வாளர்களால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டது
   1. 1900 - 1920 வரை  2. 1910 - 1925 வரை  3. 1922 – 1930 வரை
   4. 1930 - 1950 வரை  5. 1900 – 2000 வரை

2. வேதத்தின் இறுதிப் பகுதியாக அமைவது
   1. சைவசித்தாந்தம்  2. வேதாங்கம்  3. புராணம்
   4. ஆகமம்  5. உபநிடதம்

3. "ஒரு நாட்டின் விழுமியக் கருத்துக்களை வழிவழியாகப் பேணிப் பாதுகாக்கும் பண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு எழுச்சி பெற்றதே நாகரிகம் ஆகும்" எனக் கூறியவர்
   1. ஆல்பரட் ஸ்விட்சர்  2. டாக்டர் இராதாகிருஷ்ணன்  3. ஆடம் பெர்கூஸன்
   4. E.P. ரெய்லர்  5. ரி.கே. சிதம்பரநாத முதலியார்

4. நான்கு வர்ணத்தவர்களில் நாட்டை ஆளுபவர்கள்
   1. பிராமணர்  2. சத்திரியர்  3. வைசியர்  4. சூத்திரர்  5. ரிஷிகள்

5. சிந்துவெளிப் பிரதேசம் சிறப்புப்பெற்றிருந்த காலம்
   1. கி.மு 3750 – கி.பி 2250 வரை  2. கி.மு 1500 – கி.பி 2250 வரை
   3. கி.மு 2750 – கி.மு 3250 வரை  4. கி.மு 1500 – கி.மு 600 வரை
   5. கி.மு 3250 – கி.மு 2750 வரை

6. "தூய்மையான இறைவனை தூய பாடல்களால் போற்றுவோமாக" என்று குறிப்பிடுவது
   1. இருக்கு  2. யசுர்  3. சாமம்  4. அதர்வணம்  5. பரசுருதி

7. தலை சிறந்த வைத்தியன் என இருக்கு வேதம் போற்றும் தெய்வம்
   1. வருணன்  2. அக்கினி  3. சோமன்  4. உருத்திரன்  5. இந்திரன்

8. காலத்தால் முந்திய வேதப் பகுதி
   1. பிராமணங்கள்  2. சங்கிதைகள்  3. ஆரணியங்கள்
   4. உபநிடதங்கள்  5. வேதாங்கங்கள்

9. இருக்கு வேதத்தில் மக்களது ஒழுக்கத்தைக் கண்காணிக்கும் தெய்வமாகப் போற்றப்படுபவன்
   1. வருணன்  2. உருத்திரன்  3. அக்கினி  4. ஆதித்தியன்  5. மகவான்

10. இருக்கு வேதப் பாடல்களோடு தொடர்புடைய ரிஷிகளுள் **மூவரின்** பெயர்கள் அடங்கிய தொகுதி
    1. அத்திரி, வசிட்டர், வியாசர்  2. வாமதேவர், அத்திரி, சோமசம்பு
    3. கிருத்ஸமதர், வால்மீகி, வாமதேவர்  4. விசுவாமித்திரர், வாமதேவர், பரத்தவாசர்
    5. கிருத்ஸமதர், உக்கிரசேனர், வாத்ஸ்யாயனர்

11. வேதகால தெய்வங்களில் சூரியனோடு தொடர்புடைய சவிதா என்ற தெய்வத்திற்குரியது
    1. காயத்திரி மந்திரம்  2. பிரமச்சரிய சூக்தம்  3. புருஷ சூக்தம்
    4. பௌஷ்டிகாணி மந்திரம்  5. நமசிவாய மந்திரம்

12. **"அபௌருஷேயம்"** என்பதன் பொருள்
    1. எழுத்தில் பொறிக்கப்படாதது  2. வாயால் ஓதி செவியால் கேட்கப்பட்டு வந்தது
    3. அறிவுக் களஞ்சியமாக விளங்குவது  4. மனிதனால் ஆக்கப்படாதது
    5. ரிஷிகளால் ஆக்கப்பட்டது

13. அதர்வண வேதத்தில் உள்ள காண்டங்கள், பாடல்கள் முறையே
1. 10, 1028 2. 20, 731 3. 18, 1875
4. 20, 6000 5. 18, 6000

14. பிரபஞ்ச உற்பத்தி பற்றிக் கூறும் இருக்கு வேதப் பகுதி
1. புருஷசூக்தம் 2. வருணசூக்தம் 3. நாஸதீயசூக்தம்
4. யமசூக்தம் 5. முனி சூக்தம்

15. 'வேதங்களும் ஆகமங்களும் மெய்யானவை எனவும் இறைவன் நூல் எனவும்' போற்றியவர்
1. யாஸ்கர் 2. மாக்ஸ்மூலர் 3. சுவாமி விவேகானந்தர்
4. திருமூலர் 5. மணிவாசகர்

16. இந்திய தத்தவ மரபில் **'அவைதிகம்'** எனக் குறிப்பிடப்படுவன
1. சமணம், பௌத்தம், உலகாயதம் 2. சைவம், வைணவம், சாக்தம்
3. சாங்கியம், யோகம், மீமாம்சை 4. பௌத்தம், பாசுபதம், சமணம் 5. இருக்கு, யசுர், சாமம்

17. வேதம் நான்கினும் மெய்ப் பொருளாகிய சிவனது **'நமசிவாய'** என்ற மந்திரம் முதன் முதலில் இடம்பெறுவது
1. பாதராயணரின் பிரமசூத்திரத்தில் 2. யசுர்வேத சதருத்திரியத்தில்
3. திருமூலரின் திருமந்திரத்தில் 4. இராமாயண யோக வாசிஷ்டத்தில்
5. பதஞ்சலியின் யோக சூத்திரத்தில்

18. உழவனுக்கும் வர்த்தகனுக்கும் தம் கருமங்களில் வெற்றியையும் இன்பத்தையும் அளிக்கும் அதர்வவேத மந்திரங்களைக் குறிக்கும் பெயர்
1. பேஷயானி 2. அபிசாரணி 3. பௌஷ்டிகாணி
4. ஸ்திரிகர்மாணி 5. ராஜகர்மாணி

19. **'சத்தியமான பொருள் ஒன்றே'** என்ற கருத்து முதன் முதல் இடம் பெறும் தொன்மையான நூல்
1. இருக்கு வேதம் 2. அதர்வவேதம் 3. சுக்கிர நீதி
4. இராமாயணம் 5. சுக்கிர நீதி

20. **'நாகரிகம்'** என்ற சொல் முதன்முதல் இடம்பெற்ற தமிழ் நூல்
1. திருமந்திரம் 2. திருக்குறள் 3. நற்றிணை
4. மணிமேகலை 5. கலித்தொகை

21. வேதப்பாடலில் கூறப்படும் தேவர்கள்
1. வருணன், சூரியன், மித்திரன், முருகன், சிவன்
2. விநாயகர், உருத்திரன், விஷ்ணு, நாராயணர், வைரவர்
3. சூரியன், உருத்திரன், அக்கினி, வருணன், இந்திரன்
4. இந்திரன், வருணன், ஐயனார், கௌரி, காளி
5. அக்கினி, மித்திரன், சூரியன், வைரவர், இந்திரன்

22. இந்துப் பண்பாட்டில் இசை மரபு வளம்பெற முன்னோடியாக அமைந்த நூல்
1. நாட்டியசாஸ்திரம் 2. யசுர் வேதம் 3. சாமவேதம்
4. ஆயுள் வேதம் 5. அதர்வண வேதம்

23. "இந்திய சிற்பக்கலை இந்தியாவிற்கே உரியது" எனக் கூறியவர்
1. கன்னிங்காம் 2. அலெக்ஸ்சாண்டர் 3. வில்லியம்
4. சேர்.ஜோன்.மார்ஷல் 5. அறிஞர் மாக்கே

24. **'பண்பாடு'** என்ற பதத்திற்கு பழந்தமிழ் இலக்கியங்களிற் சுட்டப்படும் சொல்
1. மரபு 2. சால்பு 3. கலை 4. ஒழுக்கம் 5. வேள்வி

25. இருக்கு வேதத்தில் அதிக பாசுரங்களால் போற்றப்படும் தேவர்
1. அக்கின் 2. வருணன் 3. இந்திரன் 4. உருத்திரன் 5. சூரியன்

26. **'ஆரணியகம்'** என்பது எதனைப் பற்றிக் குறிப்பிடுகின்றது
1. பிரமச்சரிய வாழ்க்கை 2. வானப்பிரஸ்தனுக்குரிய சமய அனுட்டானங்கள்
3. இல்லற தர்மம் 4. இறப்பின் பின் உள்ள வாழ்வு
5. உலகத் தோற்றம்

27. **‘திரயீவித்தியா’** என்பதனுள் அடங்குபவை
1. இருக்கு, யசுர், அதர்வணம் 2. இருக்கு, சாமம், அதர்வணம் 3. இருக்கு, யசுர், சாமம்
4. இயமம், நியமம், ஆசனம் 5. உபநிடதம், பிரம்மசூத்திரம், பகவத்கீதை

28. வேதங்களின் ஞான காண்டப் பகுதியைச் சேர்ந்தது
1. சங்கிதைகள் 2. பிராமணங்கள் 3. உபநிடதங்கள்
4. வேதாங்கங்கள் 5. ஆரணியகங்கள்

29. வழிபாட்டின்போது யாகங்களில் அளிக்கப்படும் அவிகளைத் தேவர்களிடத்து கொண்டு சேர்ப்பிக்கும் தெய்வமாக வேதம் போற்றுவது
1. சோமன் 2. மித்திரன் 3. அக்கினி
4. உருத்திரன் 5. அஸ்வினி

30. ‘பிராமணர்கள் அவனியில் நடமாடும் தெய்வங்கள்’ எனக் கூறுவது
1. சதபதப் பிராமணம் 2. ஐதரேயப் பிராமணம் 3. சிலப்பதிகாரம்
4. நீதிசாரம் 5. சுக்கிரநீதி

(30 x 2 = 60 புள்ளிகள்)

## பகுதி - II

- **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.**

**1) இந்துப்பண்பாட்டு வளர்ச்சியில் வேதங்களின் முக்கியத்துவத்தினை மேல்வருவன தொடர்பாகச் சுருக்கமாக விளக்குக.**

(அ) வேதங்களின் வகையும் அமைப்பும்
(ஆ) தத்துவ சிந்தனை
(இ) வழிபாடு
(ஈ) வேதத்தின் முக்கியத்துவம்.

(05+05+05+05 = 20 புள்ளிகள்)

**2) “இந்துசமய வரலாற்றின் உயரெல்லையைக் குறித்து நிற்பது சிந்துவெளி நாகரிகமாகும்”**

(அ) சிந்துவெளி நாகரிகம் சிறப்புப் பெற்றிருந்த **மூன்று** நகரங்களையும், தொல்பொருள் அறிஞர்கள் **மூவரையும்** குறிப்பிடுக.
(ஆ) சிந்துவெளி நாகரிகம் “**நகர நாகரிகம்**” என்பதற்கு நீர் முன்வைக்கும் காரணங்களை சுருக்கமாகத் தருக.
(இ) சிந்துவெளி நாகரிககால மக்களின் சமய நம்பிக்கைகளை எடுத்துக் கூறுக.
(ஈ) சமூகநிலை

(05+05+05+05 = 20 புள்ளிகள்)

**3) “இந்துப்பண்பாடு தனித்துவமானதும் சிறப்புத்தன்மை வாய்ந்ததுமாகும்”.**

(அ) இந்துநாகரிகம், இந்துப்பண்பாடு என்பவற்றை அறிந்த கொள்வதற்குரிய மூலாதாரங்களைக் குறிப்பிடுக.
(ஆ) நாகரிகம், பண்பாடு என்பவற்றின் பொருள் விளக்கத்தினைத் தந்து இரண்டிற்கும் இடையிலான தொடர்பினை குறிப்பிடுக.
(ஈ) இந்து நாகரிகத்தின் சிறப்பம்சங்களை விளக்குக. (05+05+10 = 20 புள்ளிகள்)

*****